# இந்து வேதம்

மெய்ஞ்ஞானக்கொடி

மெய்ஞ்ஞானக்கொடி

**தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்**



## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி
## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறூர்
## அவர்கள் அருளியவை

**பங்குனி மாத வெளியீடு (March 2014)**

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,115

# இந்து வேத தேவ விளக்கச் சிந்தனைகள்

காணிக்கை ரூ.10/-

# வேண்டுகோள்

இந்த நூலில் இருந்து கருத்துக்களை வெளியிட விரும்புவோர், மேற்கோளாகக் காட்ட விரும்புவோர் இவ் வாசகங்களைக் கூட்டாமலோ, குறைக்காமலோ அப்படியே எடுத்துக் கையாளுமாறு வேண்டப் படுகிறார்கள்.

இந்த நூலை அப்படியே பதிப்பிக்க விரும்புவோர் கீழ்க் காணும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப் படுகிறார்கள்.


**இளமை மாறா இலக்கிய இயக்கம்**
எண் 6, G.S.T.சாலை, A-413, வைகுண்டம் அபார்ட்மெண்ட்ஸ்,
நந்திவரம், கூடுவாஞ்சேரி - 603202
Phone: 94441 73940


---

# உள்ளுறை


1) **இந்துவேத மாநாட்டு செயற்குழு கூட்டத் தீர்மானங்கள்.**
2) **இந்து வேத விளக்கக் கருத்துக்கள்.**
3) **இந்து வேத தேவ விளக்கச் சிந்தனைகள்.**


— — — — — — — — — — — —

21.7.91

தலைமைப்பீடம்

# இந்துவேத மாநாட்டு செயற்குழு கூட்டத் தீர்மானங்கள்

1. இந்துவேத மாநாட்டில் [போடப் பட வேண்டிய முதல் தீர்மானம்]: *இமயம் முதல் குமரி வரை உள்ள எல்லாக் கோயில்களிலும் தமிழ்மொழியில்தான் அருட்சினை செய்யப்பட வேண்டும்.*

அப்பொழுதுதான் இந்துமதம் பொதுமக்களிடையில் அவரவர்களுடைய குறைகளைப் போக்குகின்ற நம்பிக்கையான மதம் என்ற நிலை பெற்றிடும்.

அதாவது இன்றைய நிலையில் தமிழ்நாடு தவிர இந்தியாவில் உள்ள எல்லாக் கோயில்களிலும் பூசை செய்வதற்கு அருள் மருந்தாகவும் கிடைப்பதில்லை, விருந்தாகவும் கிடைப்பதில்லை. இந்துமதக் கோயில்கள் சுற்றுலாக் காட்சிப் பொருளாக இருக்கின்றன. இவைகளை அருளூற்றுக்களாகவும், அருட்கனி மலர்ச் சோலைகளாகவும் மாற்றிப் பயன் உள்ளவைகளாக மாற்றிட தமிழ்மொழியில்தான் பூசைகள் செய்திட வேண்டும்.

தமிழ்மொழி எழுத்துக்கள்தான் இந்துமதக் கடவுள்களின் வடிவமைப்பும் உயிர்நாடியும் ஆகும். இதேபோல் தமிழ்மொழிச் சொற்களின் ஒலி நயங்கள்தான் இந்துமதக் கடவுளுடன் தொடர்பு உண்டாக்கித் தரும். எனவே, தமிழ்மொழியில்தான் குமரி முதல் இமயம் வரை பூசை செய்ய வேண்டும்.

2. தமிழ்மொழிதான் அண்ட பேரண்ட அருளுலக ஆட்சிமொழி. இதனுடைய சொல் ஒலி நயங்களின் மூலம், அனைத்து வகைப்பட்ட பயிரின உயிரின ஒலியினையும் ஒலித்துக் காட்ட முடியும். எனவே, இதுதான் முழுமையான மொழி. இந்த மொழியில் மந்திர எழுத்துக்கள், சொற்கள், சொற்றொடர்கள் என்ற மூன்றின் ஒலிநயங்களின் மூலம் கல், மண், மணல், மரம், உலோகம் முதலிய எல்லாவகைப் பொருட்களிலும் செய்யக் கூடிய சிலைகளுக்கு உயிர்ப்பு ஊட்ட முடியும்.

எனவேதான் இந்த உலகிலேயே ஆரம்பம் முதல் இன்று வரை உருவ வழிபாடு இருக்கிறது. ஏனென்றால் புதியதாக செய்கின்ற உருவங்களுக்கு உயிர் ஊட்டும் உயிர்ப்பு கலைகளும், பழைய சிலைகளுக்கு மீண்டும் உயிர் ஊட்டும் புத்துயிர்ப்பு கலைகளும் இந்து மதத்தில்தான் இருக்கின்றன, இருக்கின்றன, இருக்கின்றன. இந்தக் கலைகள் ***தமிழ்மொழியில்தான் இருக்கின்றன.***

தமிழ் மொழிக்கும் உலக மொழிக்கும் உள்ள தொடர்பு எப்பொழுது அறுபட்டதோ; அதாவது தமிழர்கள் உலக நாட்டு மக்களோடு வணிகத்தின் மூலம் கொண்டிருந்த தொடர்பு எப்பொழுது நின்றதோ அது முதல் உலக நாடுகளில் சிலைகளுக்கு உயிர் ஊட்டுவதும், புத்துயிர்ப்பு ஊட்டுவதும் தடை பட்டு, குறைந்து மறைந்து போயின. இது உரோமானியா, சிரியா, மெசபடோமியா, எபிரேயம், எகிப்து, பாரசீகம், சீனம், ... முதலிய நாடுகளில் உருவ வழிபாடு வீழ்ச்சியுற்ற வரலாறு மூலமாகத் தெரிய வந்துள்ளது.

அதாவது, தமிழர்களோடு தொடர்பு கொண்டு தமிழ் மந்திரங்களை, அந்தந்த நாட்டு மக்கள் தங்கள் தங்களுடைய மொழிகளுக்கு ஏற்ப உச்சரித்து பூசை செய்யும் வழக்கம் இருந்திட்ட வரை உருவ வழிபாடு அல்லது சிலை வழிபாடு எல்லா மதங்களிலும் இருந்திட்டது. அதற்குப் பிறகு, சிலைகளிலும், கோயில்களிலும் பல்வேறு காரண காரியங்களால் அருளாற்றல் குறைந்தபோது, அவற்றைச் சரி செய்வதற்கு தமிழ்மொழியும் இல்லை, தமிழர்களும்

இல்லை. எனவேதான், உலகில் உள்ள எல்லா மதங்களிலும் உருவ வழிபாடு குறைந்து ஆற்றல் இழந்து போயின.

இந்தப் பேருண்மையின் மூலம் உலகம் முழுவதும் உள்ள மதங்கள் அனைத்துக்குமே பதினெண்சித்தர்களுடைய சித்தர் நெறியெனும் இந்துமதம்தான் அடிப்படையாக இருந்தது, இருக்கிறது என்ற பேருண்மை விளங்குகிறது. அதாவது, அண்ட பேரண்டங்களிலிருந்து வந்த பதினெண்சித்தர்கள்தான், இந்த உலகம் முழுவதுமுள்ள அருளூற்றுக்களைக் கண்டுபிடித்து, அவற்றின் அருளணு வெளிப்பாட்டு நிலைகளுக்கு ஏற்பப் பல்வேறு வகையான சிலைகளையும், கருவறைகளையும், கோயில்களையும் உருவாக்கினார்கள். அதே நேரத்தில் ஆங்காங்கே இருந்த மக்களின் மொழிகளுக்கு ஏற்ப தமிழ் மொழியின் ஒலி நயங்கள் கெடாமல், பூசைமொழிகளையும், விதிகளையும் வகுத்துக் கொடுத்தார்கள்.

இப்படி, பதினெண்சித்தர்களுடைய சித்தர்நெறி எனும் அருள் நெறி உலகப் பொது நெறியாக, உலகம் முழுவதும் உள்ள எல்லா மொழியினரும், இனத்தவரும், நாட்டவரும், அவரவருடைய மண்ணில் தோன்றக் கூடிய திருக்கல், அவரவர் நாட்டில் உள்ள பயிரினங்களில் தோன்றக்கூடிய தருக்கல், அவரவர் நாட்டு உயிரினங்களில் தோன்றக் கூடிய கருக்கல், அவரவர் நாட்டில் அருளாளர்களில் பதினெண்சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்ட குருக்கல் என நான்கு வகைப்பட்ட கடவுள்களையும் மட்டும், அவரவர் தாய்மொழியில் அவரவர் பண்பாட்டிற்கு ஏற்ப பூசை செய்து அருளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மொழி இன மத நாட்டு தனித் தன்மைகளை பாதுகாக்கின்ற வகையில் உருவாக்கப் பட்டதுதான் பதினெண் சித்தர்களுடைய அருளுலக சித்தர் நெறியான இந்துவேதம்.

எனவே, இந்து வேதம்தான் உலக வேதம், உலகப் பொதுவேதம். இந்த இந்துவேதம்தான் உலகம் முழுவதும் உள்ள எல்லா மொழி மக்களுக்கும், இன மக்களுக்கும், நாட்டு மக்களுக்கும் உரியதாகத் தோற்றுவிக்கப் பட்டது. அதாவது, மலையிலிருந்து ஓடி வருகின்ற

ஆறு பல கிளை ஆறுகளாக பிரிந்து வந்து நாடு முழுவதும் பாய்வது போல்; அண்ட பேரண்டங்களிலிருந்து வந்த இந்துவேதம் எனும் ஆறு பல்வேறு கிளைகளாகப் பிரிந்து உலக மக்கள் அனைவருக்கும் சென்று சேருகின்றது.

இந்துவேதம், இந்துமதம், இந்துவேத மதமான இந்துமதம் எனும் ஆலமரத்தின் இலைகளாகவும், கிளைகளாகவும், விழுதுகளாகவும்தான் உலக முழுவதும் மதங்கள் தோன்றும் அல்லது தோன்ற முடியும். எனவே, எதிர்பாராமல் தாய்மரத்தில் இருந்து விடுபடக் கூடிய விழுதுகளும், விழுதுகளோடு கூடிய கிளைகளும், தனிக் கிளைகளும் தோற்றுவிக்கக் கூடிய புதிய புதிய ஆலமரங்களாகத்தான் இந்த உலகில் மதங்கள் தோன்ற முடியும். இதைத் தவிர ஆலமரத்தின் பழங்களில் இருந்து கிடைக்கும் விதைகள் மூலமும் ஆலமரக் கன்றுகளாகத்தான் புதிய புதிய மரங்கள் கிடைக்கும்.

இப்பேருண்மையினை என்றைக்கு எந்த மதம் தோன்றினாலும் சரி, அந்த மதத்தால்:

கடவுள்கள் பற்றியோ, கடவுள்களின் உலகங்களைப் பற்றியோ,
கடவுள்களின் பிறப்பு, இறப்பு, பிறப்பிறப்பற்ற பெருநிலை பற்றியோ;
கடவுள்களின் ஆண், பெண், அலி நிலை பற்றியோ;

கடவுள்களில் திருக்கல், தருக்கல், கருக்கல், குருக்கல் என்ற நான்கு வகை கடவுள்களைப் பற்றியோ;

கடவுள்களின் அருவ நிலை, அருவுருவ நிலை, உருவஅருவ நிலை, உருவ நிலை என்ற நான்கைப் பற்றியோ;

விரும்புபவர்கள் தொடர் முயற்சிகளாலும், குருவழிப் பயிற்சிகளாலும் கடவுள்களை சந்திக்கலாம், அல்லது கடவுள்கள் தங்களைச் சந்திக்க வரச் செய்யலாம்;

கடவுள்களை மனிதர்களாகப் பிறப்பு எடுக்க வைக்கலாம். மனிதர்கள் கடவுளாக மாறலாம்;

..... .... ..... .....

என்ற செய்திகளில் ஊசிமுனை அளவு கூட எந்த செய்திகளையும் எந்த மதமும் கூற முடியாது. எந்த அருளாளர்களும் கூற முடியாது.

இன்னும் சொல்லப் போனால் பதினெண்சித்தர்களுடைய தத்துவத் தொடர்பு இன்றி; அல்லது மொழி இன நாட்டுச் செயல்நிலை தொடர்பின்றி எந்த ஓர் அருளாளரும் கடவுளைப் பற்றிக் கூற முடியாது. கடவுளைச் சந்தித்ததாகக் கூற முடியாது. கடவுளைப் பிறருக்குக் காட்ட முடியாது.

இன்னும் சொல்லப் போனால் உலக அருளாளர்கள் தங்களைக் கடவுள்களின் வாரிசுகளாகவோ அல்லது கடவுள்களின் பதிலிகளாகவோ அல்லது கடவுள்களின் தூதுவர்களாகத்தான் தங்களைப் பற்றிக் கூற முடியும். ஆனால், யாருமே பதினெண்சித்தர்களுடைய அண்டபேரண்டமாளும் சித்தர் நெறியான சீவநெறி எனும் இந்து வேத மதமான இந்து மதத்தின் அருளாளர்களைப் போல் தாங்களே கடவுளாக மாறவும், பிறரைக் கடவுளாக மாற்றுவதற்கு முயலவும் முடியாது, முடியாது, முடியவே முடியாது. **இதுதான் இந்துமதத்தின் சிறப்பு, இந்து வேதத்தின் தனித்தன்மை.**

3. "... இந்துமதம் இந்த மண்ணுலக மக்கள் அனைவருக்கும், எல்லா வகைப்பட்ட பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும் அருளை வழங்குகின்ற பொது மதம். ஏனென்றால், இந்த மதத்தில்தான்; அருகம்புல், தருப்பைப் புல், ஆவாரஞ்செடி, எருக்கம் செடி, ... கள்ளி மரம், ஆலமரம், அரசமரம் முதலிய பயிரினங்கள் ஒளி வடிவம் பெற்று மோட்சத்திற்கு சென்றிருக்கின்றன. ஈ. எறும்பு, நத்தை, நண்டு, சிலந்தி பூச்சி, கரிச்சான் குருவி, புறா, கிளி, காக்கை, கழுகு, நாரை, பசுமாடு, யானை, ... முதலிய பலவகைப்பட்ட உயிரினங்களையும் கடவுள்கள் நேரில் தோன்றி மோட்சத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள்.

இப்படிப் பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும் மோட்சம் கொடுத்த பட்டியலே அதிகம் இருக்கின்ற போது, பிறம்ம தேவன்

ஆகிய யாம், முக்கொம்பு காட்டிலிருந்து 100 ஆண்டுகளுக்கு மேல் இந்து வேதத்தைப் பரப்ப முயன்றும், இந்துமதத்தை மறுமலர்ச்சி செய்ய முயன்றும் நினைத்தது போல் வெற்றி பெற முடியாமல்; பிறம்மதேவன் ஆகிய எம்மை அழைத்து இந்துவேதத்தை எழுதித் தரச் சொல்லியுள்ள ஞானாச்சாரியார், இந்துமதத் தந்தை, 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்களின் விருப்பப்படி 11வது முறையாக இந்துவேதத்தை எழுதித் தருகிறோம்.

“எமது நோக்கிலும் போக்கிலும், இதில் 64 முறை சிவபெருமான்கள் தாங்களே நேரில் வந்து திருவிளையாடல் புரிந்ததையும், 63 நாயன்மார்கள் மூலம் அருளுலகத்தை விளக்கிச் செயல்பட்டதையும்; கடவுள்களில் ஒருவரான திருமால் ஒன்பது முறை தாமே மானுடக் கருவில் தோன்றிச் செயல்பட்டதையும்; பன்னிரண்டு ஆழ்வார்கள் மூலம் செயல்பட்டதையும்; பதினெண்சித்தர்கள் படைத்த 108 வகை திருப்பதிகளிலும், 243 வகை சத்தி பீடங்களிலும், 1008 வகை சீவ ஆலயங்களிலும் தொடர்ந்து அருளாற்றல் வெளிப்பட்டு மக்களுக்கு நன்மைகளைச் செய்து வருவதையும் பிறம்ம தேவனாகிய யாம் விளக்கி யுரைத்தும்; எம் முன்னால் அமர்ந்திருக்கும் நூற்றுக்கணக்கான சித்தரடியான்களும், சித்தரடியாள்களும், சித்தரடியார்களும் அருட்கோட்டங்கள் அமைத்து அருளை அநுபவப் பொருளாக வழங்கிச் செயல்பட்டும் வருகிறோம். **உலக மதங்கள் அனைத்துக்கும் மூலக் கரு இந்துமதமும் இந்துவேதமும் தான்** என்ற பேருண்மையை நிலைநாட்டவே இந்துவேத முழக்கங்களை முழங்க எல்லோரும் தயாராகுங்கள். உயிரினங்கள் நன்மையடையும், நன்மையடையும், நன்மையடையும். ...”

4. ‘இந்து’ என்ற சொல் இந்தியாவில் உள்ள எந்த மொழியிலும் இல்லை - தமிழ்மொழியில் தவிர. இதேபோல் ‘இந்தியா’ என்ற சொல்லுக்கு இந்தியாவில் உள்ள 86 மொழிகளில் ஒரு மொழியில் கூடப் பொருள் இல்லை. உலக மதங்களிலேயே பத்தி, சத்தி,

சித்தி, முத்தி எனும் நான்கினைத் தருவதற்கு வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக இருக்கின்ற காயந்திரி என்கின்ற பூசைமொழி வேறு எந்த மொழியிலும் இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை.

காயந்திரி என்ற சொல்லுக்குரிய பொருள்: இந்தப் பூசைமொழியினைச் சொன்னால் (காயம் என்ற சொல்லுக்குப் பொருள் உடல், பொருள், உயிர், ஆவி, ஆன்மா என்னும் ஐந்தின் கூட்டுப் பொருளாகும்.) இந்த ஐந்தும் திரிந்து, அதாவது இந்த ஐந்தும் உரிய பக்குவநிலை பெற்று பத்தி, சத்தி, சித்திகளை, முத்திகளைப் படிப்படியாகப் பெறும். இதற்கு உதவுகின்ற மொழிதான் காயந்திரிப் பூசைமொழி. இப்படி இந்துவேதம், இந்துவேத மதமான இந்துமதம், இந்துமதத்தின் அல்லது அருளுலகத்தின் உயிர்நாடி பூசைமொழியான காயந்திரி இவை அனைத்தும் தோன்றிய நாடான இந்தியா ஆகிய அனைத்துச் சொற்களும் தமிழ்மொழியில்தான் இருக்கின்றன.

எனவே, தமிழ்மொழிதான் இந்துமத அருளாட்சி மொழி, இந்துமதப் பூசைமொழி, இந்துமதத் தெய்வ மொழி, தேவமொழி, கடவுள்மொழி, மனிதனைக் கடவுளாக்கும் மொழி, மனிதனை கடவுளை சந்திக்க வைக்கும் மொழி, கடவுளை நேரில் வரவழைக்கும் மொழி, அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழி. எனவே, **தமிழர்கள்தான் அருளுலகின் வாரிசுகள், நாயகர்கள், மூலவர்கள், தலைவர்கள், தத்துவ வித்துக்கள்**.

எனவே, தமிழ்மொழியின் மலர்ச்சியே இந்துமதத்தின் மலர்ச்சி, தமிழர்களின் விடுதலையே இந்துமதத்தின் விடுதலை. தமிழின வரலாறு இந்துமத வரலாறு. தமிழ்நாடே இந்துமதத்தின் பிறப்பிடம், இருப்பிடம்.

தமிழ்மொழியில்தான் இந்து மதத்தின் இந்து வேதம் இருக்கின்றது. இந்து மதத்தின் பூசைமொழிகள், தத்துவங்கள், செயல் சித்தாந்தங்கள், வரலாறுகள், இலக்கியங்கள்.... முதலிய அனைத்தும் இருக்கின்றன. இப்பேருண்மைகளை முதலில் தமிழர்களை உணரச் செய்ய வேண்டும். இதற்குத்தான் இந்துவேத மாநாடு கூட்டப்படுகின்றது.

5. இந்துவேத மாநாடு ஏன்? இது இந்துமத மாநாடு அல்ல. இது ஓர் இலக்கிய மாநாடு. அதுவும் இந்த உலகிலேயே முதல்மொழி, மூத்த மொழி, தொன்மையான மொழி, பழமையான மொழி என்று சொல்லப்படும் தமிழ்மொழியில் உள்ள இந்துவேத இலக்கியங்களை உலகம் முழுவதும் உணரும்படிச் செய்வதற்கு நிகழ்த்தப்படும் இலக்கிய மாநாடு.

இது ஏன் இப்பொழுது கூட்டப்படுகின்றது என்றால்; இன்றைக்கு இந்துமதத்தில் உள்ள தலைவர்கள், மடாதிபதிகள், ஆச்சாரியார்கள், சன்னிதானங்கள், பண்டாரங்கள் என்று இருப்பவர்களில் யாருக்குமே இந்து, இந்துவேதம், இந்துமதம், இந்துவேத மதமான இந்துமதம், இந்துமத வரலாறு, இந்துமத வாழ்வியல், இந்துமதச் சமுதாயம், அரசியல், .... என்று நேரிடையாகத் தலைப்பிட்டு பேசத் தெரியவில்லை, புரியவில்லை, முடியவில்லை. பேசுவதற்குரிய இலக்கியச் சான்றுகளும், ஊன்றுகளும் இல்லை.

ஏனென்றால், இங்கே குறிப்பிட்ட அனைத்தும் தமிழ்மொழியில்தான் இருக்கின்றன என்ற பேருண்மை எவருக்குமே ஏறத்தாழ தெரியாது, தெரியாது, தெரியாது, தெரியவே தெரியாது. இதைவிடக் கேவலம் என்னவென்றால், இந்தப் பேருண்மையைத் தெரிந்த சிலரும், இப்பேருண்மையை ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை, இல்லை, இல்லை, தயாராகவேயில்லை. எனவே, இந்துமதத்திற்கு வருங்காலமே இல்லை என்ற நிலை வந்துள்ளது. எனவேதான், இந்துவேதம் பற்றிய இந்த மாநாடு நடத்தப் படுகிறது.

இதன் மூலம் உலகில் உள்ள எல்லா மதங்களும், மதங்களின் வரலாறுகளும், தத்துவங்களும், சித்தாந்தங்களும், பூசைமொழிகளும், பூசைவிதிகளும், பூசைக்குரிய கோயில்களும், மற்ற நடைமுறைகளும் மூடநம்பிக்கைகளிலிருந்து விடுபடும். கண்மூடித்தனமான மடமைகளிலிருந்தும் விடுபடும். முரட்டுத் தனமான பிடிவாதங்களிலிருந்தும் விடுபடும். வறட்டுத் தனமான மதமாற்று வழிகளிலிருந்தும் விடுபடும். எல்லா மதங்களிலும் அருளை அநுபவப்

பொருளாகப் பெறக்கூடிய வாய்ப்பு உண்டாகும். அதாவது மனித வாழ்வு மேம்படும்.

இந்த உயரிய நோக்கத்திற்காகத்தான் இந்து வேத மாநாடு கூட்டப் படுகிறது.

6. இன்றைக்கு சைவம், அத்வைதம், துவைதம், மாத்வம், வைணவம், சாக்தம், லிங்காயத்வம்.... என்ற பெயர்களால்தான் தனித்தனி மதங்கள் இருக்கின்றனவே தவிர இந்துமதம் என்ற பெயரால் ஒரு மதம் இல்லை, இல்லை, இல்லவே இல்லை. எனவேதான், இந்துவேத மாநாட்டின் மூலம் இந்து மதம் எனும் ஆலமரத்தின் கிளைகளாகவும், விழுதுகளாகவும், இலைகளாகவும் இருப்பவைகளே இந்தியாவில் இன்றைக்கு மேலே குறிப்பிட்ட பிரிவுகள் அனைத்தும் என்பதை எல்லோருக்கும் உணர்த்துவதற்குத்தான் இந்துவேத மாநாடு நடத்தப் படுகிறது.

அதாவது, தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம், அதுவும் எளிய, இனிய, எல்லோருக்கும் புரியக்கூடிய உரைநடைத் தமிழ்மொழியில் இருக்கின்ற இந்து வேதத்தை முதலில் தமிழர்கள் அனைவரும் புரிந்து கொண்டு தங்களுக்குள் இருக்கின்ற சாதி மத வெறிகளையும், போட்டி பொறாமை, சண்டை சச்சரவுகளையும் அகற்றி விட்டு, இந்து வேதம் என்ற பெயரின் கீழ், சொல்லின் கீழ் தமிழர் அனைவரும் ஒன்றுபட்டே ஆக வேண்டும். இப்படித் தமிழர்களை ஒற்றுமைப் படுத்துவதற்காகவே இந்த இந்துவேத மாநாடு கூட்டப் படுகிறது.

அப்படி தமிழன் ஒற்றுமைப் பட்டால்தான் உலக பொது தத்துவமான ‘உலக மானுட மேம்பாட்டுத் தத்துவத்தின்’ மூலம் உலகம் ஒற்றுமைப்படும், இந்தியா ஒற்றுமைப்படும். எனவே, இது **உலக இந்து மறுமலர்ச்சி இயக்கம**ாகும். அதாவது, இந்துவேதத்தை உலகம் முழுவதும் பரப்புவதற்காக, உலக நன்மைக்காகவே (2000 ஆண்டுகளுக்கு முன்னால்) ஏற்படுத்தப் பட்டிருக்கின்ற ஓர் ஒப்புயர்வற்ற இயக்கம்தான் **உலக இந்து மறுமலர்ச்சி இயக்கமாகும்**.

7. இன்றைய நிலையில் இந்துமதம் பிழைக்குமா? தழைக்குமா? வருங்காலத்தில் இருக்குமா? என்ற கேள்விக்குறி வந்து விட்டது.

a. இந்துமதத்தின் தலைவர்கள், அரசியல்வாதிகள், சமுதாய வாதிகள், மடாதிபதிகள், பீடாதிபதிகள்.... முதலிய யாருக்குமே இந்துமதம், இந்துவேதம் என்றால் தெரியாது, தெரியாது, தெரியாது.

b. இந்துமதக் கோயில்களில் இருக்கின்ற குருக்கள், அர்ச்சகர்கள், பூசாறிகள் என்ற யாருக்குமே இந்துமதம், இந்துவேதம், இந்துமத வரலாறு, இலக்கியங்கள்.... என்பவை புரியாது. அவர்கள் இந்து என்ற சொல்லைச் சொல்லுவதில்லை.

c. ஊர்ப்பொதுவில் பல்வேறு மதங்களுக்கிடையில் இந்துக்கள் தங்களுடைய மதத்தைப் பற்றிப் பேசுவதற்கு, கூறுவதற்கு அனுமதியில்லை. அதாவது, இந்து மதக் கோயில்கள் அனைத்தும் இந்துமதத்திற்கு அன்னியமானவர்களின் கையில் இருக்கிறது. அல்லது இந்துமதத்தை நேரடியாக வளர்க்கவும், காப்பாற்றவும் தெரியாத அப்பாவிகளின் கையில் இருக்கிறது. எனவே, இவர்களைத் திருத்துவதற்கு இந்துவேத மாநாடு கூட்டப்படுகிறது.

d. இந்துமதத்தின் உயிர்நாடியே அல்லது கொள்கையே அல்லது குறிக்கோளே மக்களுக்கு மந்திரித்து அருளை மருந்தாகவும், விருந்தாகவும் வழங்கி உடல்நோய், உயிர்நோய், நாள் கோள் மீன் பாதிப்பு, காற்று கருப்பு பேய் பிசாசு பாதிப்பு, மந்திரவாதி பாதிப்பு, சாபம், கண்ணேறு பாதிப்பு.... முதலிய பாதிப்புகளிலிருந்து மக்களை விடுவிப்பதே ஆகும். இந்த மாபெரும் செயல் திட்டத்திற்காகத்தான் கோயில்களிலே குரு, குருக்கள், குருமார், பூசாறி, அருளாளி, அருளாடு நாயகம், மருளாளி, மருளாடு நாயகம், சோதிடர், முக்காலக் கணிச்சி, குறிகாரன், .... முதலியவர்களை இந்துவேதம் உருவாக்கிற்று. ஆனால், இப்பொழுது கோயில்களில் உள்ள 'குருக்கள், அர்ச்சகர், பூசாரி' என்பவர்களில் யாருக்குமே மந்திரிக்கத் தெரியாது. மந்திரிப்பவர்களை செயல்பட அனுமதிப்பதில்லை என்ற நிலையில்தான் இருக்கிறார்கள். இவர்களை

எல்லாம் இந்துவேத பாடசாலை, இந்துவேதப் பள்ளிக் கூடம், இந்துவேதக் கல்லூரி, இந்துவேதப் பல்கலைக் கழகம் முதலியவைகளைத் தோற்றுவித்து செயல்படுவதின் மூலம் திருத்துவதற்காகத்தான் இந்துவேத மாநாடு கூட்டப்படுகிறது.

e. இதுபோல், 'வாருங்கள் பூசாரிகளே, குருக்களே, அர்ச்சகர்களே, இந்துவேத முறைப்படி பூசைசெய்யக் கற்றுக் கொள்ளுங்கள். மந்திரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.' என்று கூறுகின்ற வல்லமையும், செயல்திட்டமும் இந்துவேத பீடமான பதினெண்சித்தர் மடத்தில்தான் இருக்கிறது. இந்து வேதமான தமிழ்மொழியில்தான் இருக்கிறது. எனவே, இந்துவேத மாநாடு தமிழ்மொழியில் கூட்டப்படுகிறது.

8. இன்றைக்கு இந்தியா முழுவதுமுள்ள கோயில்களில் மொத்த எண்ணிக்கையில் அதிகமான இந்துமதக் கோயில்கள் இங்குதான் (தமிழ்நாட்டில்) இருக்கின்றன. அடுத்தாற்போல வேதக் கோயில்கள், ஆகமக் கோயில்கள், ஆரணக் கோயில்கள், சுருதிக் கோயில்கள், மீமாம்சைக் கோயில்கள், ... முதலிய அனைத்து வகைக் கோயில்கள் இருக்குமிடம் தமிழகம்தான். இந்த அனைத்து வகைப்பட்ட கோயில்களில் பூசை செய்யப்படும் ஒரே மொழி தமிழ்மொழிதான். ஒரே வேதம் தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம்தான். எனவேதான், இந்தப் பேருண்மையினை உலகம் முழுவதும் உள்ள இந்துக்களுக்கு அறிவிப்பதற்குத்தான் இந்துவேத மாநாடு கூட்டப்படுகிறது.

9. இந்துவேத மாநாட்டின் மூலம் இந்துமதத் தலைவர்கள், ஆச்சாரியார்கள், மடங்கள், சன்னிதானங்கள், ஆதினங்கள், திருச்சபையினர், வாரவழிபாட்டு மன்றத்தினர், பசனை மடத்தினர் முதலியவர்களை அழைத்து '**இந்துவேத மதம் தான் இந்துமதம்**' என்ற உண்மையை விளக்க வேண்டும்.

இந்துமதத்திற்கென்று வேதம் உண்டு. அந்த வேதம் இந்து வேதம் எனப்படும். இந்த வேதத்தின் மூலமாகத்தான் இந்த மதம் அழைக்கப் படுகிறது. அதாவது இந்து மதத்திற்கென்று மிகத்

தெளிவான வரலாறு, வேத அடிப்படையும், அருளாளர்களின் பட்டியல்களும், வகைவகையான கோயில்களின் பட்டியலும், கடவுள்களின் பட்டியலும் இருக்கின்றன. இருக்கின்றன, இருக்கின்றன என்ற பேருண்மைகளை விளக்கவே இந்துவேத மாநாடு கூட்டப் படுகின்றது.

10. இந்துவேத உண்மைகளையும், இந்துமத உண்மைகளையும் இந்துமதத்தின் மேட்டுக்குடி மக்களுக்கு உணர்த்தினால் போதும். அல்லது இந்துமதத்தின் தலைமைச் சத்திகளுக்கு உணர்த்தி விட்டால் போதும்; இந்துமதத்தின் எல்லாவகையான நலிவு, மெலிவு, ஏக்கம், தேக்கம், வீக்கம், அடக்கம், முடக்கம் .... முதலிய அனைத்தையும் அகற்றி விடலாம், அகற்றி விடலாம், அகற்றியே விடலாம். இந்தக் கொள்கையின் அல்லது நோக்கத்தின் செயல்வடிவே இந்துவேத மாநாடு.

அதாவது இந்துவேத மாநாடு இந்து மதத்தின் சாதாரண அப்பாவிப் பாமரப் பொதுமக்களை கூட்டி வைத்துப் பேசுவதற்காகக் கூட்டப் படவில்லை. அதாவது, இந்து வேதம் தெரியாத இந்துக்களே! இந்து மதம் தெரியாத இந்துக்களே! இந்து வேத மதமான இந்து மதத்தைத் தெரிந்து கொள்ள வாருங்கள்! என்று அழைத்து இந்துவேத மாநாடு கூட்டப் படுகிறது.

**இதை எழுதியவர்**: அருள்மிகு அகத்தியர் சன்னிதானம் மு.இராமானுசதாசு, காரைக்குடி.

**இடம்:** 3, தென்றல், N.G.O. காலனி, பொன்னேரி, செங்கை அண்ணா மாவட்டம் - 601204.

**நாள்:** 1991 சூலை 21ஆம் நாள்.

***//உண்மை நகல்//***

# இந்து வேத விளக்கக் கருத்துக்கள்

## இந்து மறுமலர்ச்சி இயக்க நிறுவன நிருவாகக் கட்டமைப்பு வளர்ச்சிக் கருத்துக்கள்

**குறிப்பு:-** உரையாடல்களிலும், சொற்பொழிவுகளிலும் வெளியிடப்பட வேண்டியவை.

1. நம்மவர்கள்,

தமிழ்மொழி, தமிழினம், தமிழர்கள், தமிழ்நாடு,
தமிழர் சமுதாயம், தமிழர் சமயம், தமிழர் பண்பாடு, தமிழர் நாகரீகம்,
தமிழிலக்கியங்கள், தமிழிலக்கிய வளவளர்ச்சி,
தமிழ்மொழி வரலாறு, தமிழிலக்கிய வரலாறு, தமிழ்நாட்டு வரலாறு, தமிழரின் இளமுறியாக் கண்ட வரலாறு,
தமிழ்மொழியின் முச்சங்க வரலாறு,
தொல்காப்பியப் பெருமை,
உலகச் சமுதாய இயல் விளக்கம் தரும் திருக்குறள்,
வரலாற்றுக்கும் முந்திய பழம்பெரும் தொன்மையான தமிழ்ச் சங்க இலக்கியங்கள்,
முத்தமிழ்ச் சங்க வரலாறு,
தமிழரில் அருளாளர்கள் தொடர்ந்து தோன்றுதல்,
பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும் தொடர்ந்து வாழையடி வாழையெனச் செயல்படும் தமிழ்நாடு,
இந்தியாவிலேயே அதிகமான இந்துக் கோயில்களுள்ள தமிழ்நாடு.
இந்துமதத்திற்குரிய கடவுள்களில் அதிகமான கடவுள்களின் வடிவங்களும், வாழ்வியல்களும் நிறைந்த தமிழ்நாடு,

கணக்கற்ற வகைவகையான சிலைகளையுடைய கோயில்கள் மிகுதியாக உடைய நாடு தமிழ்நாடு.

நாயன்மார்கள், ஆழ்வார்கள், அடிகளார்கள், பத்தியாளர்கள், சத்தியாளர்கள், சித்தியாளர்கள், முத்தியாளர்கள் தோன்றிக் கொண்டேயிருக்கக் கூடிய நாடு தமிழ்நாடு; தோன்றிக் கொண்டேயிருக்கக் கூடிய இனம் தமிழினம். தோன்றித் தோன்றி அருட்பாக்களைப் பாடிக் கொண்டே யிருக்கக் கூடிய ஒரே ஒரு மொழி தமிழ்மொழி,

மனிதர்களைக் கடவுளாக்கும் பூசைமொழிகளை உடைய ஒரே மொழி தமிழ்மொழி,

.... என்றுள்ள இக்குறிப்புக்களில் சிலவற்றையாவது ஒவ்வொருவரும் உரையாடல்களிலும், சொற்பொழிவுகளிலும் பேச வேண்டும்.

2. இந்து மதத்திற்குரிய சமயக் குரவர்கள், சந்தானக் குரவர்கள், ஆச்சாரியார்கள், மடாதிபதிகள், பீடாதிபதிகள் அதிகமாகத் தோன்றிக் கொண்டேயிருக்கக் கூடிய ஒரே ஒரு நாடு தமிழ்நாடுதான். இதைப் போலவே தமிழ்நாட்டில்தான் இந்து மதத்தினுடைய எல்லாப் பிரிவுகளும் இருக்கின்றன.

3. தமிழர்கள்தான் இந்துமதத்தின் மூலவர்கள், முதல்வர்கள், நாயகர்கள், வாரிசுகள், தத்துவ வித்துக்கள், காவலர்கள்.... என்ற பெருமைகளை உடையவர்கள். எனவேதான், இந்தத் தமிழர்கள் ஒற்றுமைப் பட்டால்தான் இந்துமதம் மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், ஆட்சி மீட்சியும் அடைய முடியும் என்ற பேருண்மை குமரி முதல் இமயம் வரையுள்ள இந்துக்கள் மட்டுமின்றி இந்த உலகம் முழுவதுமுள்ள இந்துக்கள் அனைவருக்கும் தெரிவிக்கப் படவேண்டும், புரியவைக்கப் படவேண்டும்.

அதற்காகவே தமிழகத்திலுள்ள அல்லது தமிழர்களுக்கிடையிலுள்ள பல்வேறு வகையான அரசியல் கட்சிகள், சமுதாயக் கட்சிகள், சமயக் கட்சிகள், கலை இலக்கியக் கட்சிகள், தொழில் கட்சிகள், தனிப்பட்ட தமிழ்ப் பெரியார்கள், பல்வேறு துறையைச் சார்ந்த

தலைவர்கள்..... முதலியோர்களின் பெயர்களால் உள்ள மன்றங்கள், கழகங்கள், சங்கங்கள், சபைகள், குழுக்கள், .... முதலியவைகள் அனைத்தும் தங்களுக்குள் உள்ள பிரிவினை வாதங்களையும், குழு மனப்பான்மைகளையும், கொள்கை வெறிகளையும் விட்டுக் கொடுத்து, மறந்து, துறந்து, இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் நேரடியாக உறுப்பினராகச் சேர வேண்டும், சேர வேண்டும், சேர வேண்டும். அதற்காக ஒவ்வொரு தமிழனும் முயற்சிக்க வேண்டும், முயற்சிக்க வேண்டும், முயற்சிக்க வேண்டும்.

4. இன்றைய நிலையில் தமிழர்களுக்காக தமிழ் மொழிக்காக, தமிழர் மதத்திற்காக இருக்கின்ற மடங்கள், பீடங்கள், ஆதீனங்கள், மத நிறுவனங்கள், ... முதலியவற்றின் தலைவர்கள் பொதுமக்களை வந்து சந்திக்கக் கூடிய மரபு அல்லது பழக்கம் மிகமிகக் குறைவாக இருக்கிறது. இதேபோல் தமிழர்கள் தங்களுக்கென்று உள்ள மடாதிபதிகளையும், பீடாதிபதிகளையும், ஆச்சாரியார்களையும், மற்ற மதத் தலைவர்களையும் தேடிச் சென்று பார்க்கும் பழக்கமும், நம்பிக்கையும், விருப்பமும், ... மிகமிகக் குறைவாகவே இருக்கின்றன, மிக மிகக் குறைவாகவே இருக்கின்றன, மிக மிகக் குறைவாகவே இருக்கின்றன.

**இதற்கெல்லாம் காரணமாக இருப்பவர்கள் பெரும்பாலும் தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்கள், கலை உலகத் தலைவர்கள், இலக்கிய உலகத் தலைவர்கள், தொழில்துறைத் தலைவர்கள் முதலிய அனைவருமேதான். எனவே, மேலே குறிப்பிட்ட அனைத்து வகைப்பட்ட தலைவர்களும் உடனடியாகத் தங்களுடைய தவறுகளை உணர்ந்து உடனடியாகத் திருந்தி, தங்களுடைய தவறுகளுக்குரிய பரிகாரங்களைச் செய்திட முன்வர வேண்டும்.**

**அதாவது, மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து வகைப்பட்ட தலைவர்களும் நமது மதத்திற்கும் மத நிறுவனங்களுக்கும், மதத்துறைத் தலைவர்களுக்கும் மிகப் பெரிய அளவில் உரிய மரியாதைகளையும், மதிப்புக்களையும், முதன்மைகளையும், மேலாண்மைகளையும் வழங்கிட**

**முன்வர வேண்டும், வழங்கிட முன்வர வேண்டும், வழங்கிட முன்வர வேண்டும். அப்பொழுதுதான் நம்முடைய மத உணர்வும், அறிவும், வாழ்வியலும்; தமிழர்களுடைய ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் விழியாக, வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக விளங்கிடும்.**

இதை விட்டுக் கண்மூடித்தனமாக "*இந்துமத வெறி கூடாது, இந்துமத வெறி கூடாது, இந்துமத வெறி கூடாது*" என்று சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. ஏனென்றால், ஏறத்தாழ நூற்றில் ஒரு தமிழனுக்குக் கூடத்

'தான் ஓர் இந்து; தன்னுடைய மதம் இந்துமதம்;

இந்துமதம் தமிழர்களுடைய மதம்;

இந்துமதம் பிறந்தது தமிழ்நாட்டில்;

இந்துமதத்தின் அனைத்து வகைப்பட்ட பூசைமொழிகள், பூசைவிதிகள், தத்துவ நூல்கள், செயல் சித்தாந்த நூல்கள், அத்தர அத்திர அத்திற நூல்கள், சாத்தர சாத்திர சாத்திற நூல்கள், சூத்தர சூத்திர சூத்திற நூல்கள், தோத்தர தோத்திர தோத்திற நூல்கள், நேத்தர நேத்திர நேத்திற நூல்கள், வேத்தர வேத்திர வேத்திற நூல்கள், நேமங்கள், நியமங்கள், நிடதங்கள், நிட்டைகள், நீதிகள், சுருதிகள், ஆரணங்கள், ஆகமங்கள், மீமாம்சைகள், மறைகள், முறைகள், நெறிகள், வேதங்கள் முதலிய அனைத்துமே தமிழ்மொழியில்தான் இருக்கின்றன. தமிழ்மொழியில்தான் இருக்கின்றன, தமிழ்மொழியில்தான் இருக்கின்றன;

தமிழ்நாடுதான் இந்துமதத்தின் கருவறை;

தமிழ்நாடுதான் இந்துமதத்தின் கருவூலம் ....'

என்ற உண்மைகள் தெரியாது, தெரியாது, தெரியாது, தெரியவே தெரியாது.

அதாவது, எந்த ஒரு தமிழனும் மேற்படி உண்மைகளைத் தெரிந்து கொள்ளக் கூடாது; மேற்படி உண்மைகளைப் புரிந்து கொள்ளக் கூடாது; **மேற்படி உண்மைகளை நம்பிச் செயல்பட்டு**

**விடக்கூடாது.... என்று இந்த நாட்டிற்கு வந்துள்ள அனைத்து வகையான அன்னியர்களும் தொடர்ந்து சூழ்ச்சி செய்து வருகிறார்கள்! தொடர்ந்து சதி செய்து வருகிறார்கள்! தொடர்ந்து சூழ்ச்சி செய்து வருகிறார்கள்! தொடர்ந்து சதி செய்து வருகிறார்கள்! தொடர்ந்து சூழ்ச்சி செய்து வருகிறார்கள்! தொடர்ந்து சதி செய்து வருகிறார்கள்!** நமது கள்ளங்கபடமற்ற வெள்ளை உள்ளம் கொண்ட தமிழர்கள் அப்பாவித் தனமாகவும், ஏமாளித்தனமாகவும் இந்த நாட்டிற்கு வந்துள்ள அன்னியர்களுடைய சூழ்ச்சிக்கும், சதிக்கும் இரையாகி விட்டார்கள்.

5. நமது தமிழர்கள் அப்பாவிகளாக, ஏமாளிகளாக இருக்கின்ற காரணத்தினால்தான் அன்னிய நாட்டார்களும், அன்னிய மதவாதிகளும், தமிழர்களிலேயே சிலரைப் பணம், பட்டம், பதவி, புகழ், ... முதலியவைகளைக் கொடுத்து விலைக்கு வாங்கி பகுத்தறிவின் பெயராலும் சீர்திருத்தத்தின் பெயராலும் இந்துமதத் துரோகிகளாகவும், விரோதிகளாகவும் ஆக்கி விட்டார்கள்.

அந்த விரல்விட்டு எண்ணப்படக் கூடிய அன்னிய மதத்திற்கும், நாட்டாருக்கும் அடிமையாகி விட்ட கூலிகள், கங்காணிகள்; தமிழர்களுடைய மதவுணர்வுகளையும், மதஅறிவுகளையும், மதப்பற்றுக்களையும், மதப்பாசங்களையும், மத ஆர்வங்களையும், விருப்பங்களையும், ஈடுபாடுகளையும், மத வாழ்வியல்களையும் குரங்கு பூமாலையைப் பிய்த்தெறிவது போல் பிய்த்தெறிந்து விட்டார்கள். இப்பேருண்மைகளை கணிசமான அளவு அல்லது குறிப்பிட்ட அளவு தமிழர்களாவது தெரிந்து புரிந்து உணர்ந்து நம்பிச் செயல்படுமாறு செய்ய வேண்டும்.

அதாவது, **தமிழர்களுக்கிடையில் விரைந்தும், விரிந்தும், மத அறிவு வளர வேண்டும், மத உணர்வு வளப்பட வேண்டும், மதப்பற்றும் பாசமும் வலிமை பெற வேண்டும். மத வாழ்வியல் நடைமுறைகளில் பதினெண் சித்தர்கள் வழங்கிய இந்துமதத்தின் கருத்துக்கள் செயலாக வேண்டும். இதற்குரிய வண்ணம் வார**

**வழிபாடுகள், சொற்பொழிவுகள், பட்டி மன்றங்கள், கருத்தரங்குகள், ... முதலியன நடத்த வேண்டும். நடத்த வேண்டும், நடத்த வேண்டும். இதுதான் இந்துமத நெறி என்று கூற வேண்டும்.** இது எந்த வகையிலும் இந்துமத வெறி அல்ல என்பதையும் விளக்கி உரைக்க வேண்டும்.

இன்னும் சொல்லப் போனுல் இந்துமதம் தமிழ் நாட்டில் செழிச்சி யுற்ருல்தான் இந்தியா அளவிலும், உலக அளவிலும் இந்துமதம் விழிச்சி பெறும், விழிச்சி பெறும், விழிச்சி பெறும். எழிச்சி பெறும், எழிச்சி பெறும், எழிச்சி பெறும்.

6. **இப்பேருண்மைகளே இந்துமதப் பத்தர்களும், பத்தியாளர்களும், சத்தியாளர்களும், சித்தியாளர்களும், அறிஞர்களும், புலவர்களும், சொற்பொழிவாளர்களும் தங்களால் முடிந்தவரை விளம்பரப் படுத்த வேண்டும். விளக்கியுரைக்க வேண்டும்.**

**7.** இவற்றை உணர்ந்து அன்னிய நாட்டார்களுக்கும், மதத்தார்களுக்கும் கைக்கூலிகளாக, கங்காணிகளாக, அடிமைகளாக இருந்து கொண்டும், நாத்திகம் பேசியும், பகுத்தறிவு பேசியும் ... ... ... ;

தமிழர்களுடைய சொத்தான இந்து மதத்தை,
தமிழர்களுடைய காவல் சத்தியான இந்து மதத்தை,
தமிழர்களே ஒற்றுமைப்படுத்தும் அற்புதச் சத்தியான இந்து மதத்தை,
தமிழர்களே ஒருமைப்படுத்தும் பேராற்றல் மிக்க சத்தியான இந்துமதத்தை,
தமிழ் மொழிப் பற்றையும் பாசத்தையும் வளப்படுத்தும் இந்து மதத்தை;
தமிழின் உரிமையையும், பெருமையையும் பாதுகாத்துப் போற்றிப் பேணி வளர்க்கும் இந்து மதத்தை,
தமிழ்மொழியின் விடுதலையைக் காத்திடும் இந்து மதத்தை,
தமிழர்களுக்குத் தன்னம்பிக்கையைத் தரும் இந்து மதத்தை,
தமிழர்களுக்கு இன உணர்வைத் தருகின்ற இந்து மதத்தை,

தமிழர்களுக்கு இன உரிமை உணர்வை வளர்த்திடும் இந்து மதத்தை,
தமிழர்களுக்கு வரலாற்று அறிவையும் வரலாற்று உணர்வையும் வளர்க்கின்ற இந்து மதத்தை,
தமிழர்களுக்கு இலக்கிய உணர்வையும், இலக்கிய அறிவையும் வளர்க்கின்ற இந்துமதத்தை
தமிழர்களுக்கு வழிகாட்டிகளாகவும், வழித் துணைவர்களாகவும் நின்று நிலவக் கூடிய புதிய புதிய தலைவர்களையும் பழம்பெரும் நிறுவன நிர்வாகங்களையும் அறிமுகப் படுத்தும், பாதுகாத்துத் தரும் இந்துமதத்தை,
தமிழர்களுக்கு வருங்காலத்தை ஒளிமயமாக்கித் தரும் இந்துமதத்தை,
தமிழர்களுடைய அழிநிலைகளையும், இழிநிலைகளையும், பழிநிலைகளையும் தடுத்து அகற்றிப் பாதுகாப்புத் தரக்கூடிய பேராற்றல் மிக்க இந்துமதத்தை,
தமிழர்கள் பிறருக்கு அடிமையாவதைத் தடுத்துத் தரும் இந்துமதத்தை,
தமிழர்கள் ஏமாளிகளாகவும், கோமாளிகளாகவும் ஆக்கப் படுவதைத் தடுத்துக் காத்திடும் இந்துமதத்தை
தமிழர்களின் உயிராக உள்ள இந்துமதத்தை, ... ...

தமிழர்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும், தெரிந்து கொள்ள வேண்டும், தெரிந்து புரிந்து உணர்ந்து நம்பிச் செயல்பட வேண்டும். அதற்கு ***இந்துமதம் வேறு - ஹிந்துமதம் வேறு*** என்ற நமது அறிக்கையும், கருத்துக்களும் விளக்கப் பட்டாக வேண்டும். தமிழர்களுடைய இந்துமதம் தான் இந்தியா முழுவதும் பரவியுள்ளது என்று புரிய வையுங்கள்.

அருளாணை பெற்ற குருவாணை.

**அன்பு**

**ஞானாச்சாரியார், ஞாலகுரு**

**தலைவர், குருதேவர் சித்தர் கருவூரார்**

//உண்மை நகல்//

//மூலநகல்: மதுரையிலிருந்து கிடைத்த தட்டச்சு நகலிலிருந்து எடுக்கப் பட்டது.//

# இந்துவேத தேவ விளக்கச் சிந்தனைகள்

## மதுரை இந்து நாடார் பத்த சபை

16.8.92 ஞாயிற்றுக் கிழமை இந்துமத ஆண்டு 43,73,093 ஆக்குரோச ஆண்டு ஆடித் திங்கள் 32ஆம் நாள்

பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, கருகுல ஆதீனம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரார், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அருளாசியுடன்,

இந்து வேதம் பரப்பும் நாயகம், சமயக் குரவர் நால்வர் திருத்தோன்றல் த. கேசவன் ஆற்றும் சொற்பொழிவு.

## இந்துவேத தேவ விளக்கம்

*அருளுபவர்:- அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார், இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, இந்துமத முழுமுதல் தலைமைக் குருபீடம் பதினெண்சித்தர் மடாதிபதி.*

1. இன்று, இந்துமத ஆண்டு 43,73,093ஆம் ஆண்டு, ஆக்குரோச ஆண்டு ஆடித் திங்கள் 32ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (16.8.92) ஆலவாய் மதுரை மாமூதூரில் மதுரை இந்துநாடார் பத்த சபையில் வாசிக்கப்படும் கட்டுரை.

2. இக்கட்டுரையை வாசிப்பவர் அருள்மிகு இந்துவேதம் பரப்பும் நாயகம், சமயக் குரவர் நால்வர் திருத்தோன்றல், சித்தரடியார் த. கேசவன்.

3. இன்று இங்கு கூடியுள்ள பத்தியுணர்வு மிக்க பெரியோர்கள் அனைவர்க்கும் முதற்கண் தாத்தாக்கள் ஆத்தாக்களின் திருவருளும், அம்மையப்பன்களின் திருவருளும் சித்திக்கட்டும் என்று வாழ்த்துகின்றோம்.

4. உங்களுடைய பத்தியுணர்வு முறையான வரலாற்றறிவையும், இலக்கிய அறிவையும் பெற்றுத் திகழ்ந்திட வேண்டுமென்று குவலய குருபீடம் விரும்புகின்றார். ஏனெனில், வட இமயத்தின் முடி முதல் தென்கோடிக் கன்னியாகுமரிக் கடலடி வரை பரந்து விரிந்துள்ள இந்துமத இந்தியாவில்; பத்தியுணர்வு ஊற்றெடுத்து வற்றாது ஆற்றுப் பெருக்காக ஓடிக்கொண்டு தான் இருக்கின்றது. இந்தப் பத்தியுணர்வு ஆறாக ஓடுவதாலும் இந்த ஆற்றின் இருமருங்கிலும் ஆற்று நீரின் ஊற்றமும் ஆற்றலும் வளமாக இருப்பதாலும் இந்துமத இந்தியாவில் அருளாளர்கள் கனிமலர்ச் சோலைகளாகத் தோன்றிக் கொண்டே இருக்கின்றார்கள். இந்துமதக் கோயில்கள் அருட்பாதுகாப்புக்களை வழங்கும் சிறந்த அருளாற்றல் உடையவைகளாகத்தான் விளங்குகின்றன. இந்துமதக் கடவுள்களிடம் பத்தியால், சத்தி சித்தி முத்திகளைப் பெறக் கூடியவர்களும் தொடர்ந்து காலங்கள் தோறும், ஊர்கள் தோறும் தோன்றிக் கொண்டே இருக்கின்றார்கள். இந்துக்களின் வாழ்க்கையில் ஏற்படக் கூடிய நாள், கோள், மீன் பாதிப்புக்களுக்கும், தோல்விகளுக்கும், தொல்லைகளுக்கும், நோய்நொடிகளுக்கும், பல்வேறு வகையான பேய் பிசாசுப் பாதிப்புக்களுக்கும், .... உடனுக்குடன் பரிகாரங்கள் செய்து நலம் விளைவிக்கும் சோதிடர்களும், குறிகாரர்களும், பூசாறிகளும், சித்து விளையாடல் காரர்களும் தோன்றிக் கொண்டே இருக்கின்றார்கள். இவற்றால், நமது இந்துக்கள், இந்துமதத் திருநாள்கள், திருவிழாக்கள், சடங்குகள், சாத்திர சம்பிறதாயங்கள், கோயில் வழிபாடுகள், பாரம்பரியக் குலதெய்வ குடும்ப ஆண்டவர் பூசைகள்..... முதலியவைகளை யெல்லாம் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றார்கள். நமது இந்துக் கோயில்கள் அனைத்திலும் கூட்டம் நிரம்பி வழிகின்றது.

நமது மதத் தலைவர்கள், ஆச்சாரியார்கள், மடாதிபதிகள், சாமியார்கள்.... முதலியோர் எல்லாம் நல்ல வளத்தோடும் செல்வாக்கோடும் புகழோடும் ஞான உலா வருகின்றார்கள்.

5. இப்படி யெல்லாம் இந்துமதம் சீரும் சிறப்புமாக இருக்கின்றது. இன்றைக்கு இங்கே நடக்கும் இந்த மதுரை இந்துநாடார் பத்த சபைக் கூட்டமும், இந்துமதம் புகழோடும் பொருளோடும் செல்வாக்கோடும் வாழுகின்றது என்ற பேருண்மையைத்தான் மெய்ப்பிக்கின்றது, விளக்குகின்றது.

6. இந்த நிலையில் இந்துக்களிலேயே ஏன் கடவுள் மறுப்பாளர்கள், வெறுப்பாளர்கள், மத எதிர்ப்பாளர்கள், நாத்திகர்கள், மத விரோதிகள், மதத் துரோகிகள், மதப் போலிகள், மதக்காலிகள், மதக் கருங்காலிகள் அதிகமாகிக் கொண்டே போகின்றார்கள்? .... இவற்றிற்கெல்லாம் மேலாக; அன்னிய நாட்டார்கள் தங்களுடைய வேதங்களின் புகழ் பாடியும், வேத வசனங்களை முழக்கியும், வேத மதப் பூசைமுறைகளையும், சடங்குகளையும், வரலாறுகளையும் விளக்கி யுரைத்து, தங்களுடைய மதத்துக்காக அன்னிய நாடுகளிலிருந்து வந்து குவியும் ஏராளமான பணத்தின் மூலம் ஏழை எளிய பாட்டாளிப் பாமர மக்களை விலை கொடுத்து வாங்கியும்.... இந்து மதத்தைச் சீரழித்துக் குறைத்து நலிந்து மெலியச் செய்கின்றார்கள். இது ஏன்? ஏன்?! ஏன்?!! இது எப்படி நிகழுகிறது?! எப்படி நிகழுகிறது??!! எப்படி நிகழுகிறது???!!! ... என்பதை இது போன்ற பத்தர்களின் சங்கங்கள், சபைகள், குழுக்கள், கழகங்கள் சிந்திக்க முன்வர வேண்டும்! ஆராய்ச்சி செய்ய முன்வர வேண்டும்!! அதுதான் பத்தர்களின் மெய்யான தொண்டு! அதுதான் பத்தர்கள் உடனடியாகச் செய்ய வேண்டிய கடமை.

7. நம் நாட்டுப் பத்தர்கள் தனிப்பட்ட முறையில் வேண்டுதல்களை விடுத்து; அவை நிறைவேறியவுடன் காணிக்கைகளை கோயில் உண்டியல்களில் கொட்டுகின்றார்கள். அப்படிக் கொட்டும் காணிக்கைகள் இவர்களுக்கு அருள் புரிந்த கடவுள்களின் விருப்பப்படி செலவாகாமல்;

அரசியல்வாதிகளாலும், பல்வேறு வகைப்பட்ட சூழ்ச்சியாளர்கள் முதலியோரின் விருப்பப்படியே பெரும்பாலும் செலவாகின்றன. இதனைப் பத்தர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

8. இவர்களைப் போலவே, பல பத்தர்கள் தங்களின் குலமும், குடும்பமும் பரம்பரை பரம்பரையாகச் செல்வச் செழிப்பிலும், உலகியல் செல்வாக்கிலும் சிறந்து விளங்கிட அருள்புரியும் கடவுள்களின் கோயில்களில் பல்வேறு வகையான விழாக்களை மிகப் பெரிய ஆரவார நிகழ்ச்சிகளாலும், ஆடம்பர நிகழ்ச்சிகளாலும் நிகழ்த்தி ஏராளமான பொருளைத் தாராளமாகச் செலவிடுகின்றனர்கள். இதில் தேவையில்லாத போட்டாப் போட்டிகளும் வம்பு வீம்புகளும் கூட நிகழ்ந்து வருகின்றன. இவர்களும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

9. அப்பொழுதுதான் “இந்துக் கடவுள்களும், கோயில்களும், இவற்றின் அருட்செயல்களும் **‘இந்துவேதம்’** எனும் கனிமலர்ச் சோலையிலே பூத்த மலர்களும், காய்த்த காய் கனி கிழங்குகளுமே யாகும். எனவே நமது பத்தர்களும், பத்தியுணர்வுகளும் இந்த ‘இந்துவேதம்’ எனும் கனிமலர்ச் சோலையைத் தொடர்ந்து வளமாக வளர்த்துக் காத்திட நேரடி முயற்சிகளில் ஈடுபட வேண்டும்! ஈடுபட வேண்டும்!! ஈடுபட வேண்டும்!!! ஈடுபட்டேயாக வேண்டும். இதற்காக, இந்த **‘இந்துவேதம்’** எனும் கனிமலர்ச் சோலையை உருவாக்கிய பதினெண்சித்தர்களையும், பதினெட்டாம்படிக் கருப்புகளையும் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ளவும், போற்றிப் பேணிப் பாதுகாத்துப் பரப்பிடவும் முன்வர வேண்டும்! முன்வர வேண்டும்!! முன்வர வேண்டும்!!! முன்வந்தேயாக வேண்டும்.

10. இந்த வேண்டுகோள் அறிவிப்பை இன்று இங்கு கூடியுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட நாடார் சமூகப் பத்தியாளர்களுக்கு விடுத்துக் கொள்வதுடன்; **‘இந்துவேதம்’** எனும் ‘கனிமலர்ச் சோலை’யைப் பற்றிய ஒரு சில கருத்துக்களையும் செய்திகளையும் வழங்குகின்றோம். இவற்றைச் செவிமடுத்த பிறகாவது; இங்குள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களில் ஒரே ஒருவராவது இந்துவேதம் வளர்க்கவும்,

காக்கவும், இந்து மதத்தைப் பாதுகாக்கவும், இந்துமத ஆட்சி மாட்சியை மீட்சி பெறச் செய்யவும் பாடுபட முன்வந்தால் போதும். அல்லது இந்த ஆயிரம் பேர்களும்; தென்றல் மலர் மணத்தையும், கனி மணத்தையும் தாங்கிச் செல்வது போல்; இங்கு கூறப்பட்டுள்ள கருத்துக்களைப் பலருக்கும் பரப்புவதன் மூலம் ஒரே ஒரு தனி மனிதர் இந்துவேதத்தையும், இந்து மதத்தையும் பாதுகாத்திடக் கிடைத்தால் போதும்! போதும்!! போதும்!!! அதுவே மாபெரும் வெற்றி.

11. இங்கு கூடியுள்ள அருளாளர்களே! பத்தியாளர்களே! திருவருட் செல்வர்களே! நீங்கள் அனைவரும் அடிக்கடி இப்படி கூடிப் பிரியும் பழக்கத்தை உருவாக்கியதற்காக உங்கள் சமூகத்தார் அனைவரையும் குவலய குருபீடம், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் திருவருளை வழுத்தி வாழ்த்துகின்றார். ஏனெனில் இன்றைய நாட்டு நடப்புக்களை உற்றுக் கவனித்து உளம் நொந்து, சிந்தை வெந்து, உணர்வு நைந்து.... அடிக்கடி 'இந்துமதம் இருக்கிறதா? இறக்கிறதா?', 'இந்துமதம் இருக்குமா? இறக்குமா?'; இந்துமத மாட்சியும் ஆட்சியும் மீட்சி பெறுமா?', 'இந்துக்கள் தன்னம்பிக்கையும் தன்மானப் பிடிப்பும் பெறுவார்களா?', 'இந்துக்கள் தங்களின் கடவுள்களையும் கோயில்களையும் மட்டும் நம்பி விரும்பி வழிபட முற்படுவார்களா?', 'மாற்று மதக் கடவுள்களையும், கோயில்களையும், பூசாரிகளையும் நம்பிச் செல்லும் இந்துக்கள் திருந்துவார்களா?'; 'பணம் பதவி உதவி .... முதலியவைகளுக்காக இந்து மதத்திலிருந்து மாற்று மதங்களுக்குச் சென்றவர் மீண்டு இந்து மதம் பற்றிச் சிந்திக்கும்படி செய்யப் படுவார்களா?'... என்ற வினாக்களுக்கு விடை கண்டிட விழியாக, வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக இருப்பவர்தான் 'இந்துவேத நாயகம்', 'இந்துமதத் தந்தை', 'அந்தணர் அண்ணல்', 'ஞானாச்சாரியார்', குருதேவர், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள்.

12. பெரியோர்களே, பத்தியாளர்களே, இன்று வாழும் இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடம், இந்துவேதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண் சித்தர் மடத்தின் மடாதிபதி, இந்துமதத்தை இம்மண்ணுலகில் தோற்றுவித்த பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதி அவர்கள்தான், இந்துவேத நூல்கள் மொத்தம் முன்னூற்றுத் தொண்ணூற்ருறு என்றும்; இந்துமத நூல்கள் மொத்தம் முப்பத்தாறு என்றும் ஆக மொத்தம் இந்துக்களுக்கென்று நானூற்று முப்பத்திரண்டு நூல்கள் இருக்கின்றன என்பதனைத் தெரிய வைத்துள்ளார்கள். ஆனால், இந்துக்கள் தங்களுக்கென்று உள்ள நூல்களில் ஒன்றின் பெயரைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதாவது, அவரவர் விருப்பம் போல் குறிப்பிட்ட கோயில்களுக்கு மட்டும் சென்று; குறிப்பிட்ட கடவுள்களை மட்டும் கும்பிடுவதும், கொண்டாடுவதும், போற்றுவதுமாக வாழ்ந்திடுகின்றார்கள். எனவேதான், மிக எளிதாக அன்னிய நாட்டு மாற்று மதங்கள் நம் மதத்தை இழித்தும், பழித்தும், கேலிசெய்தும், குறை கூறியும், கண்டபடி தாக்கியும் .... தங்களுடைய மதத்தை வளர்த்திட்டார்கள்; வளர்த்து வருகின்றார்கள். எனவே, இனிமேலாவது நம்மவர்கள் மாற்று மதத்தவர்களின் தாக்குதல்களிலிருந்து தப்பிக்கவும்; நமக்கு நாமே இந்துக்களாக வாழவும் தயாராக வேண்டும்.

13. இந்து மதத்தில் பற்றும் ஈடுபாடும் உள்ள பெரியோர்களே! உங்கள் வாழ்நாளில் இந்துமதப் புராண இதிகாசக் கதை கூறுபவர்களோ! மடாதிபதிகளோ! ஆச்சாரியார்களோ! சாமியார்களோ! அரசியல் வாதிகளோ! இந்துமதக் கட்சித் தலைவர்களோ!.... தங்களுடைய பேச்சுக்களில் ‘இந்து’, ‘இந்துவேதம்’, ‘இந்துமதம்’, ‘இந்துமத வாழ்க்கை’, ‘இந்துமத இலக்கியங்கள்’, ‘இந்துமத வரலாறு’, ‘இந்துமதத் தத்துவம்’, ‘இந்துமதக் கல்வி’, ‘இந்துமதக் கலைகள்’ ... என்று பேசக் கேட்டிருக்கின்றீர்களா? இது பற்றிச் சிந்தியுங்கள்.

14. இந்நாட்டுக்கு வந்துள்ள அன்னிய நாட்டு மதங்கள் எல்லாம் தங்களுடைய ‘வேதம்’ என்று ஒன்றைக் காட்டியே தங்களுடைய

மதத்தைப் பரப்புகின்றுர்கள். ஆனால், மடாதிபதிகளும், ஆச்சாரியார்களும், சாமியார்களும், சித்து விளையாடல் காரர்களும் மிகுந்துள்ள நம் மதத்தில் மட்டுமே 'இந்துவேதம்' பற்றி எங்குமே பேசுவதில்லையே ஏன்? ஏன்? ஏன்?

15. இந்துமதப் பத்தியாளர்களே! பதினெண்சித்தர்கள் 1) பூசைமொழி நூல்கள் 108(நூற்றெட்டு), 2) பூசைவிதி நூல்கள் 48(நாற்பத்தெட்டு), 3) தத்துவ நூல்கள் 96(தொண்ணூற்றுறு), 4) செயல் சித்தாந்த நூல்கள் 144(நூற்று நாற்பத்து நான்கு) என்று நான்கு வகையாக இந்து வேத நூல்களைப் பகுத்து வழங்கியுள்ளார்கள்.

இவற்றில் 1) நான்மறை, 2) நான்முறை, 3) நானெறி, 4) நான்வேதம் என்று நான்கு வகைப்பட்ட நூல்கள் தலையாய நூல்களாக இருக்கின்றன.

அடுத்து 1) நவ நாதங்கள், 2) பதினெண் சித்தங்கள், 3) முப்பத்தாறு ஓதங்கள், 4) தொண்ணூற்றுறு போதங்கள் என்ற நான்கு வகைப்பட்ட நூல்கள் கூறப்படுகின்றன.

அடுத்து மூன்றுவது நிலையில் 1) நான்சுருதிகள், 2) நான் ஆரணங்கள், 3) நான் ஆகமங்கள், 4) நான் மீமாம்சைகள் என்ற நான்கு வகைப்பட்ட நூல்கள் கூறப்படுகின்றன.

அடுத்து நான்காவதாக 1) நேமங்கள், 2) நியமங்கள், 3) நிடதங்கள் 4) நிட்டைகள், 5) நீதிகள், 6) விதிகள் என்று ஆறு வகைப்பட்ட நூல்கள் கூறப்படுகின்றன.

இந்த நான்கு வகைப்பட்ட நூல்களையே இந்துவேதத்தின் முன்னூற்றுத் தொண்ணூற்றுறு நூல்களின் அடிப்படையாகக் கூறலாம்.

16. நான் வேதங்களில் முதல் வேதம் 'இருக்கு வேதம்' எனப்படும். அதாவது, என்றென்றும் மக்களிடையே இருந்த, இருக்கின்ற, இருக்கப்போகின்ற வேதம் என்ற சிறப்புப் பொருளையுடையது இந்த வேதம். **இருடி வேதம்** என்பது முனிவர், சாது, சாமியார், தவசி, அடிகள், குரு, குருக்கள், குருமார், பூசாரி எனப்படுபவர்கள் செயல்படுவதற்காக எழுதியதாகும். அதாவது, வேதங்களை விளக்கி

உரைத்துப் பொருள் கூறிச் செயலாக்கும் பணி இருடிகளால் நிகழ்த்தப் படுகிறது. இதைப் போலவே அசுர சத்திகளையும் சித்திகளையும் பெற விரும்புகிறவர்களுக்காக எழுதப்பட்டது '**அசுர வேதம்**'. எல்லாத் தேவதை, தெய்வம், கடவுள், ஆண்டவர், இறை, அல்லா, எல்லா... முதலிய நாற்பத்தெட்டு வகைக் கடவுள்களையும் எழுந்தருளச் செய்யும் 'உயிர்ப்பும்', 'புத்துயிர்ப்பும்' செய்வதற்காக இரவில் ஓதப்படும் பூசைமொழிகளையும், பூசைவிதிகளையும் உடையது '**யாம வேதம்**'. எனவேதான், இது தேவர் தேவதை முதலானவர்களுக்காகவே எழுதப்பட்டது ஆகும் என்று கூறப்படுகின்றது. அடுத்து நான்காவதாக '**அதர் வான வேதம்**' என்பது வானம், விண், ஆகாயம், விசும்பு, ககனம், பால்வெளி, பரவெளி என்ற ஏழு நிலைகளில் உள்ள இடங்களில் வாழும் கடவுள்களோடு தொடர்பு கொள்ளுவதற்காக எழுதப்பட்டது. இப்படிப் பதினெண்சித்தர்கள் நான்கு வேதங்களை மிகத் தெளிவாக வகுத்துள்ளார்கள்.

17. இப்படிப் பதினெண்சித்தர்கள் வகுத்தளித்துள்ள இந்து வேதங்களில் தான் தேவர்களைப் பற்றிய முழுமையான விளக்கங்கள் இருக்கின்றன. அதாவது, 'கடவுள்' என்ற சொல்லுக்குப் பதிலாக அல்லது அதற்குச் சமமாக 'தேவன்', 'தேவர்', 'தேவதை' என்ற சொல் இந்து வேதங்களில் அதிகமாகப் பயன்படுத்தப் படுகின்றது. எனவேதான், '**இந்துவேத தேவ விளக்கம்**' என்ற பெயரில் பதினெண் சித்தர் மடத்திலிருந்து 'சொற்பொழிவுகள்', 'அருளுரைகள்', 'கருத்து விளக்கங்கள்' நாடுமுழுவதும் வழங்கப் படுகின்றன. இதனை இங்குக் குழுமியுள்ள பெரியவர்கள் சிந்தித்துப் பார்த்துப் '**பதினெண்சித்தர் மடத்தின் அருட்பணி விரிவாக்கத் திட்டம்**' மேற்கொண்டுள்ள பணிகளுக்குப் பேராதரவு தர வேண்டும்.

18. பதினெண்சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியும், அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் அருளியுள்ள 'இருக்கு வேதம்',

'அசுர வேதம்', 'யாம வேதம்', 'அதர்வான வேதம்' எனும் நான்கு வேதங்களும் தேவர்களையும், அவர்களின் வகைகளையும், வாழ்வியல்களையும், செயல்நிலைகளையும், ஆற்றல் நிலைகளையும், அவர்களின் பண்புகளையும், கோயில்களுக்கும் தேவர்களுக்கும் உள்ள தொடர்புகளையும், பூசைகளுக்கும், பூசைமொழிகளுக்கும், பூசைவிதிகளுக்கும்; மந்தர மந்திர மந்திற மாந்தர மாந்தரீகங்களுக்கும், தந்தர தந்திர தந்திற தாந்தர தாந்தரீகங்களுக்கும், எந்தர எந்திர எந்திற ஏந்தர ஏந்தரீகங்களுக்கும், தவம், ஞானம், ஐந்தீ வேட்டல், முத்தீ ஓம்பல், ஓகாசனம், யோகாசனம், குண்டலினி.... முதலியவைகளுக்கும் தேவர்களுக்கும் உள்ள தொடர்பு நிலைகள் முதலியவைகளைப் பற்றிய பேருண்மைகளை விளக்குகின்றன. இவற்றில் ஒருசில மட்டும் இங்கு எடுத்துக் கூற முன்வந்துள்ளோம். ஏனெனில், எமக்குப் போதிய கால அவகாசம் இங்கு பேசிட வழங்கப்படவில்லை.

19. அதாவது, யாம், எமக்கு வழங்கப் பட்டுள்ள குறித்த குறைந்த அரை மணி நேரத்துக்குள் எமது சொற்பொழிவை நிறைவு செய்துகொள்ள விரும்புகிறோம். இருந்தாலும், **ஒரு சில மூலக் கருத்துக்களையும் முதன்மையான விளக்கங்களையும்** இங்குக் கூறிவிட வேண்டுமென்ற துடிதுடிப்பில், ஆசையில், யாம் வேகமாக எமது சொற்பொழிவை நிகழ்த்துகிறோம். மீண்டும் எமக்கு வாய்ப்புக் கிடைக்கும் போது விரிவாகச் சொற்பொழிவை செய்வோம் என்று கூறிக் கொள்கின்றோம்.

20. **இந்துவேதங்கள் கூறுவன**:-

a. மண்ணில் உண்டாகக் கூடிய தேவர்கள் என்றும், மண் கடந்த ஏழுவகைப்பட்ட விண்வெளி உலகங்களிலிருந்து வந்த கடவுள்கள் என்றும் இரண்டு வகையினர் உண்டு.

b. தாங்களாகவே தோன்றுகின்ற தேவர்களென்றும், தோற்றுவிக்கப் படுகின்ற கடவுள்கள் என்றும் இரண்டு வகையினர் உண்டு.

c. இயற்கையான பொருள்களில் உள்ள தேவ அணுக்களில் உண்டாகின்ற தேவர்களென்றும், மனிதர்கள் தங்களின் பயிற்சி

முயற்சித் தேர்ச்சிகளால் தேவநிலே பெறுகின்ற தேவர்கள் என்ற இரு வகையினர் கடவுள்களில் உண்டு.

d. கடவுள்களில் ஆண்கள், பெண்கள், இரண்டும் கலந்த அலிகள் என்று மூன்று வகையினர் உண்டு.

e. தேவர்களில் பிறப்பவர், இறப்பவர், பிறப்பிறப்பற்ருேர் என்ற மூன்று நிலேயினர் உண்டு.

f. காலங்கள் தோறும் கோடிக்கணக்கான கடவுள்கள் தோன்றுகின்ருர்கள், மறைகின்ருர்கள்.

g. உலகெங்கும் பயிரினங்களும், உயிரினங்களும் இயற்கையாகத் தோன்றுவது போல் நாற்பத்தெட்டு வகைப்பட்ட கடவுள்களும் இயற்கையாகவே தோன்றுகின்ருர்கள். ஆனுல், அவர்கள் மனிதர்களோடு தொடர்பு கொள்ளுவது அந்தந்த நாட்டு மக்களின் பயிற்சிக்கும் முயற்சிக்கும் ஏற்பவே அமையும்.

h. எல்லா மனிதர்களும் உலகம் முழுவதும் பரவியிருக்கும் காற்றையே மூச்சுக் காற்ருகப் பயன்படுத்துவது போல், அனேத்து வகையான பயிரினங்களும், உயிரினங்களும் கடவுள்களின் அருளாற்றலுக்கிடையில்தான் வாழுகிருர்கள். ஆனுல், அவரவர் பயிற்சி முயற்சியாலேயே மூச்சையடக்கும் யோக சித்தியாளர்களேப் போல் கடவுளேக் காணும் முத்தியாளர்கள் தோன்றுகின்றனர்.

i. ஒரு நாட்டுக் கடவுள்கள் அந்த நாட்டினருக்கு மட்டுமே உதவுவார்களே தவிர, மற்ற நாட்டவர்களுக்கு உதவ மாட்டார்கள். ஏனென்ருல், ஒரு நாட்டுக்குரிய கடவுள்கள் அந்த நாட்டை விட்டு வேற்று நாடுகளுக்கு செல்ல மாட்டார்கள். அப்படியே செல்ல நேரிட்டாலும், தங்கள் நாட்டவர்களுக்கு மட்டுமே உதவுவார்கள்.

j. ஓர் இனத்துக்குரிய கடவுள்கள் அந்தந்த இனத்தவர்க்கு மட்டுமே உதவுவார்கள். வேண்டுமானுல், குறிப்பிட்ட இனத்துக்குரிய கடவுள்கள் அந்த இனத்தாரோடு திருமணத் தொடர்பு கொண்டு

இனக்கலப்பைப் பெற்றவர்களுக்கு மட்டுமே உதவிட முன்வருவார்கள். அதையும், உறுதியாகக் கூறிட முடியாது. கடவுள்களுக்கிடையில் மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று காணப்படுகிறது. மனிதர்களைப் போலவே விருப்பு வெறுப்புகளை உடைய கடவுள்களே மிகுதியாக இருக்கின்றார்கள்.

k. ஒரு மொழிக்குரிய கடவுள்கள் அந்த மொழியினருக்கு மட்டுமே உதவுகின்றார்கள். ஏனெனில், எந்த மொழி பேசப்படும் நாட்டில் கடவுள்கள் பிறக்கின்றார்களோ, அந்த மொழிக்குரிய கடவுள்கள் வேறு மொழிகளைக் கற்றுக் கொள்வதே இல்லை. ஆனால், வேற்று மொழியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் குறிப்பிட்ட கடவுள்கள் எந்த மொழிக்குரிய கடவுள்கள் என்று தெரிந்து; அந்த மொழியைக் கற்றுக்கொண்டு, அக்கடவுள்களை அவர்களுக்குரிய மொழியில் வழிபட்டால், பூசை செய்து வணங்கி வாழ்ந்திட்டால் போதும்; உடனே அந்தக் கடவுள்கள் அன்னிய மொழியினராக இருப்பவர்கள் தங்களுக்குத் தெரிந்த மொழியில் பூசை செய்ததால், வாழ்த்தி வணங்கி வழிபட்டதால் உடனே உதவுகிறார்கள்.

l. கடவுள்களுக்கு மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று உண்டு என்பதைப் போர்க்கால, போர்க்கோலக் கடவுள்களையும், அவர்களின் வடிவங்களையும், அவர்களின் உடை, படையல் உணவு, போர் ஆயுதங்கள், வாகனங்கள் முதலியவற்றைப் பார்த்தால், அவை குறிப்பிட்ட மொழியினருக்கும், அம்மொழி வழி இனத்தவர்க்கும், அந்த இனத்தவரின் நாட்டுப் பண்பாட்டு நாகரீகக் கூறுபாடுகளுக்கும் உரியனவாக இருப்பதைக் காணலாம், கண்டு உணரலாம்.

m. இவற்றால் ஒரு மொழிக்கு அல்லது இனத்துக்கு அல்லது நாட்டுக்கு உரிய மதம் வேற்று மொழியினருக்கோ, இனத்தவருக்கோ, நாட்டவருக்கோ பயன்படாது, பயன்பட

முடியாது, பயன்படுத்தக் கூடாது என்ற கருத்தைத்தான் இந்து வேதங்கள் மிகத் தெளிவாக விளக்குகின்றன என்பது புரியும்.

n. பதினெண்சித்தர்களின் இந்துவேத நூல்களிலும்; இந்து மத நூல்களிலும் மிகத் தெளிவாக 'மனிதர்களின் வாழ்க்கையும், மனித வாழ்வியலுக்குத் துணையாக இருக்கின்ற பயிரின உயிரினங்களின் வாழ்க்கையும் இந்த உலகின் ஈர்ப்புச் சத்திக்கு உட்பட்ட ஒன்பது கோள்களாலும், பன்னிரண்டு இராசிகளாலும், இருபத்தேழு விண்மீன்களாலும்; 1) காற்று, 2) கருப்பு 3) பேய் 4) பிசாசு 5) பில்லி 6) சூன்யம் 7) ஏவல் 8) செய்வினை 9) வைப்பு 10) கழிப்பு 11) மருந்து 12) கண்ணேறு எனும் பன்னிரண்டுகளாலும் கடுமையாகப் பாதிக்கப் படுகின்றன என்று கூறப்படுகின்றது. இவற்றை முன்கூட்டி அறிந்து கொள்ள 1) பிறப்பியல் (சாதகம்), 2) வரியியல் (கைரேகை) 3) அங்கவியல் (உறுப்பிலக்கணம், உடலிலக்கணம்) 4) பெயரியல் (பெயர் இராசி) 5) மனையியல் (வாழிடவியல்) எனும் ஐந்தர, ஐந்திர, ஐந்திறக் கலைகளாலும், அருட்கணிப்பு, ஞானக்காட்சி, அருள்வாக்கு, குறி, சோதிடம்.... முதலிய அருட்கலைகளாலும் மிகச் சிறந்த வழிவகைகள் வகுக்கப் பட்டுள்ளன. இவற்றை நிறைவேற்றிக் கொள்ளவே நான்கு வேதங்களின் அடிப்படையில் 1) நாற்பத்தெட்டு வகைப்பட்ட கருவறைகள், 2) நாற்பத்தெட்டு வகைப்பட்ட வெட்டவெளிக் கருவறைகள், 3) நாற்பத்தெட்டு வகைப்பட்ட வழிபாட்டு நிலையக் கருவறைகள், 4) நாற்பத்தெட்டு வகைப்பட்ட கோயில் மூலக் கருவறைகள் எனும் அருள் ஊற்றுக்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. இவற்றில், 1) திருக்கல், 2) தருக்கல், 3) கருக்கல், 4) குருக்கல் எனும் நான்கு வகைக் கடவுள்கள் உள்ளனர். இத் தேவர்கள் 1) அருவ வடிவினராக, 2) அருவுருவ வடிவினராக, 3) உருவ அருவ வடிவினராக, 4) உருவ வடிவினராக நான்கு வகைகளில் வாழுகின்றனர்.

o. இப்படியாக இந்துவேதம் தேவர்களை, தேவர் உலகை, தேவர் வாழ்க்கையை, தேவர் அருள் பெறும் வழிவகைகளை மிகமிகத் தெளிவாக விளக்குகின்றது. எனவேதான், இன்றுள்ள பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, அண்டபேரண்ட அறுதி ஆதிசத்திகள் சன்னிதானம், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், நிறையக்ஞர், பரப்பிறம்மம், நான்குயுக நாயகம், இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடம், குருதேவர், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் திருவாய் மலர்ந்தருளுபவை அனைத்தும் **‘இந்துவேத தேவ விளக்கம்’** என்ற தலைப்பில் வெளியிடப்படுகின்றன.

p. இம் மண்ணுலகுக்கு **‘இந்துவேதத்தை’** அருளிய பதினெண் சித்தர் மடத்தின் மடாதிபதியும், இம்மண்ணுலகில் **‘இந்து மதத்தை’** நிறுவிய பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதியாகவும், நான்கு யுக நாயகமாகவும், கருவறை மூலவர்களின் அம்மையப்பராகவும், அருட்கொடை வள்ளலாகவும், பரப்பிறம்மமாகவும், நிறை யக்ஞராகவும், இந்துவேத நாயகமாகவும், இந்துமதத் தந்தையாகவும், இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடமாகவும் விளங்குகின்ற பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் **‘இந்துக்களை, இந்துமதத்தைப் புரிந்து இந்துக்களாக வாழ வைக்க வேண்டும்!** என்ற கொள்கைக்காக;

   i. அருட்பணி விரிவாக்கத் திட்டம்
   ii. இந்து மறுமலர்ச்சி இயக்கம்
   iii. இந்துவேத முன்னேற்றக் கழகம்
   iv. சித்தர் கருவூரர் வார வழிபாட்டு மன்றம்
   v. சித்தர் கருவூரர் அருட்கோட்டம்

முதலிய பல அமைப்புக்களை உருவாக்கிச் செயல்பட்டு வருகின்றார். இந்துமதச் சூழலில் கல்வி நிலையங்கள் உருவாகிட ஆவன செய்கின்றார். இந்துவேதப் பாடசாலை நிறுவிப் பூசை, தவம், குண்டலினி, ஓகம், யோகம், ஓகாசனம், யோகாசனம், ஞானக் காட்சி, அருட்கணிப்பு, அருள்வாக்கு, மந்திரித்து அருள் வழங்கல்... முதலிய பல இந்துமதக் கலைகளில் பயிற்சி வழங்குகின்றார். பழைய கோயில்களைப் புதுப்பிக்கவும், புதிய கோயில்களை உயிர்ப்பிக்கவும் சக்கரங்கள் வழங்குகின்றார். இந்துவேத நூல்கள் பற்றியும், இந்துமத நூல்கள் பற்றியும் பல புத்தகங்கள் அச்சிடும் பணி நிகழ்ந்து வருகின்றது. எனவே, இங்கு குழுமியுள்ள பத்தர்கள் தங்களால் இயன்ற நேரடி உழைப்பையும், உதவிகளையும் இயன்ற வரை நல்கிட முன் வாருங்கள் என்ற வேண்டுகோளை விடுத்து எமது இச்சொற்பொழிவை நிறைவு செய்கின்றோம்.

யாம், இம் மதுரை மாமூதூரில் ‘இந்துவேதம் பரப்பும் நாயகம்’ என்று பொறுப்பேற்றுச் செயல்படுகிறோம் என்பதைத் தெரிவித்து விடை பெறுகிறோம். வணக்கம்.

அருளாணை பெற்ற குருவாணை

**//உண்மை நகல்//**

**மூல நகல்: தட்டச்சு நகலாகக் கிடைத்தது.**



மெய்ஞ்ஞானக்கொடி



இந்தப் படத்தில் இருப்பவரே தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர். இவரே தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினர்.

இவருக்கு அடுத்துப் பீடாதிபதியாகப் பட்டமேற்ற ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் குருவாணைப்படியே இந்துவேத இலக்கியங்கள் இந்தச் சுற்றறிக்கை மூலம் வெளியிடப் படுகின்றது.



**அம்மையப்பர்**

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Ilamai Maaraa Ilakkiya Iyakkam (இளமை மாறா இலக்கிய இயக்கம்), Guduvanchery. Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

**www.gurudevar.org    Email: indhuism@gmail.com**